

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 44 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 07 – செவ்வாய்க்கிழமை 23 செப்டம்பர் 2025 – மதுரை 16 + 4 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 44: Thiruvalluvar Year - 2056 - Purataasi 07 - Tuesday 23 September 2025 - Madurai 16 + 4 Pages ₹ 5.00


# இஸ்லாமியர்க்கு என்றென்றும் துணை நிற்போம்!

## நபிகள் நாயகம் 1500வது பிறந்த நாள் விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.9.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற, நபிகள் நாயகம் அவர்களின் 1500வது பிறந்தநாள் விழாவில், உரையாற்றினார். இவ்விழாவில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, சா.மு.நாசர், முன்னாள் அமைச்சர் அ. அன்வர் ராஜா, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா, தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைவர், கே. நவாஸ் கனி எம்.பி., ஆற்காடு இளவரசர் நவாப் முகமது அப்துல் அலி, சமுதாய ஒருங்கிணைப்பாளர் அப்பல்லோ ஹனிஃபா, மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமீமுன் அன்சாரி, எஸ்.டி.பி.ஐ. கட்சி தலைவர் நெல்லை முபாரக், அரசு தலைமை ஹாஜி முகம்மது அக்பர், தமிழ்நாடு ஜமாஅத்துல் உலாமா சபை தலைவர் பி.ஏ. காஜா முயீனுத்தீன் பாகவி, விழாக்குழு உறுப்பினர் அ.முகம்மது காசிம் அனீஸ், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், முகமது ஷாநவாஸ், மு.அப்துல் வஹாப், ப.அப்துல் சமது, ஜே.எம்.எச். அசன் மவுலானா, இஸ்லாமிய இயக்கத் தலைவர்கள், உலமாக்கள், மார்க்க அறிஞர்கள் கலந்துகொண்டனர்.

**சென்னை, செப்.23-**

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 1500வது பிறந்தநாள் விழா, அனைத்து இஸ்லாமிய இயக்கங்கள், அமைப்புகள் சார்பில் நேற்று முன்தினம் (21.9.2025) மாலை சென்னை - கலைவாணர் அரங்கில் சிறப்புற நடைபெற்றது.**

**இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "இஸ்லாமியர்களுக்கு நாங்கள் என்றென்றும் துணை நிற்போம்!" என்று உறுதிபடக் குறிப்பிட்டார்.**

இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

மனிதகுலத்தின் மேன்மைக்கான நற்பண்புகளை வலியுறுத்திய நபிகள் நாயகத்தின் 1500ஆவது பிறந்தநாள் விழாவில் பங்கெடுத்து, உங்கள் எல்லோரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். பெருமைப்படுகிறேன்.

### அண்ணாவும் - கலைஞரும் சந்தித்ததே 'மிலாடி நபி' விழாவில்தான்!

மதம் என்பதை நிறுவனமாகப் பார்க்காமல் மார்க்கம் என்று பார்ப்பவர்கள் நீங்கள்! அந்த மார்க்கம் அன்பு மார்க்கமாக இருக்க வேண்டும் என்பதைத்தான் நபிகளார் போதித்தார்; வலியுறுத்தினார்!

பேரறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் கலைஞரும் முதன்முதலாக சந்தித்ததே, திருவாரூரில் நடந்த மிலாது நபி விழாவில்தான்! அதன்பிறகு, அவர்களுக்கிடையில் உருவான அன்புதான், இன்றைய தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான அடித்தளம்!

### இந்த ஒற்றுமை எந்நாளும் நீடிக்க வேண்டும்!

இன்றைக்கு இந்த மேடையில் தகைசால் தமிழர் பேராசிரியர் அய்யா காதர் மொகிதீன் அவர்கள் அமர்ந்திருக்கிறார். இதே மேடையில் பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்கள் அமர்ந்திருக்கிறார். தமிமுன் அன்சாரி அவர்களும் அமர்ந்திருக்கிறார். நெல்லை முபாரக் அவர்கள் என்று பலரும் ஒன்று கூடியிருக்கிறீர்கள். இந்த ஒற்றுமை எந்நாளும் நீடிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஒற்றுமைதான் கொள்கைகளில் வெற்றி பெறுவதற்கான, முதல் படி! பழமைவாத அடக்குமுறைகளை எதிர்த்து, "ஏழைகள் மீது கருணை பொழிந்து, பணக்காரர்களிடம் இருக்கும் பணம்; மற்றவர்களுக்கும் தர வேண்டியது, உனது நடத்தை மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்" என்று வலியுறுத்தியவர் நம்முடைய நபிகளார் அவர்கள்! சமத்துவத்தை வலியுறுத்திய சிந்தனையாளர் அவர்! வரலாற்றில் சிலர்தான் ஒட்டுமொத்த மனிதச் சமுதாயத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலை வாய்ப்பை பெற்றவர்கள்! அப்படிப்பட்டவர்தான் நபிகள் பெருமான் அவர்கள்!

அதனால்தான், தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர், நபிகளார் சொன்ன சமத்துவத்தை - அன்பைப் புகழ்ந்தார்கள்!

### நபிகளார் குறித்து தலைவர் கலைஞர் பொழிந்த வரலாற்று வாசகம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நபிகள் பெருமானாரின் வாழ்வை, மூன்றே வரிகளில் எப்படி எடுத்துச் சொன்னார் என்றால்... "நபிகள் நாயகம் அவர்கள்

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

## கிராம சுகாதார செவிலியர்கள்

# 1,231 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, செப்.23-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.9.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் பயின்றவர்களுக்கு, 1,231 கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் தெரிவு செய்யப்பட்டு அதற்கான பணி நியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார்.**

தமிழ்நாடு முழுவதும் கிராமப்புறங்களில் 5000 மக்கள் தொகைக்கு 1 துணை சுகாதார நிலையம் மற்றும் நகர்ப்புறங்களில் 10,000 மக்கள் தொகைக்கு 1 துணை சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் இயங்கி வருகின்றது. 2025-ஆம் ஆண்டில் மக்கள் தொகைக்கேற்ப மேலும் 642 துணை சுகாதார நிலையங்கள், கிராமம் மற்றும் நகர்ப்புறத்தில் புதிதாக உருவாக்கப்பட்டு தற்போது கிராமப் புறங்களில் 8713 துணை சுகாதார நிலையங்களும், நகர்ப்புறங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட்ட 2368 துணை சுகாதார நிலையங்களும் இயங்கி வருகிறது.

கிராமப்புற சுகாதார நிலையங்களில் கிராம சுகாதார செவிலியர்களும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் துணை செவிலியர்களும் பணிபுரிந்து வருகிறார்கள்.

கிராம சுகாதார செவிலியர்கள் - தாய் சேய் நலப் பணி, தடுப்பூசி பணி, குடும்ப நல திட்டப் பணிகள், கருத்தடையை ஊக்குவித்தல், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம், வளர் இளம் பெண்களுக்கு சானிடரி நாப்கின்கள் வழங்குதல், இரத்த சோகை தடுப்பு மாத்திரை வழங்தல், பள்ளி சிறார்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணி, கிராம புறங்களில் சிறுசிறு நோய்களான வயிற்றுப்போக்கு, சுவாச தொற்று நோய்களுக்கு சிகிச்சை அளித்தல், குடும்ப பதிவேடு பராமரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்வர்.

துணை செவிலியர்கள் – ஆரம்ப சுகாதார நிலையங்களில் வெளிப்புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல், பிரசவம் பார்த்தல், தடுப்பூசி பணிகள், தாய் சேய் நல பரிசோதனை, குழந்தைகளுக்கான சிறு நோய்களுக்கு சிகிச்சை மற்றும் முதலுதவி அளித்தல், இரத்த அழுத்த பரிசோதனை போன்ற பணிகளை மேற்கொள்வர்.

உச்சநீதிமன்ற வழக்கில் தடையாணை காரணமாக துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக இருந்த கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் துணை செவிலியர்கள் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை.

முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொள்ளும் கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் துணை செவிலியர்களின் காலிப் பணியிடங்களை நிரப்பிட அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்பொழுது உச்சநீதிமன்ற தீர்ப்பின் வழிகாட்டுதலின்படி, அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் 25.07.2023 முன்னர் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற 1,231 மாணவர்களுக்கு வெளிப்படையான முறையில் மாவட்டங்களில் இருந்த காலிப்பணியிடங்களை தேர்வு செய்யும் வகையில் கலந்தாய்வு நடத்தப்பட்டு, தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும், மீதமுள்ள 2,417 காலிப்பணியிடங்கள் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் விரைவில் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கம், தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கம், நர்சுகள் பொதுநல சங்கம், தமிழ்நாடு அரசு கிராமப் பகுதி சமுதாய சுகாதார செவிலியர் சங்கம் ஆகிய சங்கங்களின் சார்பில் அதன் நிர்வாகிகள் சந்தித்து, கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கியமைக்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் மரு.எ.சோமசுந்தரம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு. சித்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.